தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>நவ. 21-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்</u>**

கரூரில் வரும் 21-ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நவம்பர் மாத விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 21-ம் தேதி நடைபெற உள்ளது. இதில் விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கலாம். கூட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சவுக்கு சாகுபடியில்நவீன தொழில்நுட்பங்கள்: நவம்பர் 25-ல் பயிற்சி

நாகப்பட்டினம், சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சவுக்கு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான ஒருநாள் பயிற்சி வரும் 25-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: சவுக்கு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான ஒருநாள் பயிற்சி நவம்பர் 25-ம் தேதி நிலைய வளாகத்தில் நடைபெற உள்ளது. சவுக்கு சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகளும், சவுக்கு சாகுபடி செய்வோரும் இந்த பயிற்சியில் பங்கேற்று, தங்களுக்கு உள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம். இதில் பங்கேற்க விரும்புவோர் நேரடியாக நிலையத்திலோ அல்லது 04365-246266 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

**<u>3 நாள் வேளாண் கண்காட்சி நாளை தொடக்கம்</u>**

பெங்களூருவில் நவம்பர் 19-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை வேளாண் கண்காட்சி நடைபெற உள்ளது. இதுகுறித்து பெங்களூருவில் திங்கள்கிழமை வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டி.பி.குமார். செய்தியாளர் களிடம் கூறியது: பெங்களூருவில் நவம்பர் 19-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை 3 நாள்கள் வேளாண் கண்காட்சி நடைபெற உள்ளது. கண்காட்சியை கர்நாடக ஆளுநர் வஜுபாய் வாலா தொடக்கிவைக்கவுள்ளார். வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ணேபைரே கௌடா தலைமை வகிக்க உள்ளார். ஆக்கப்பூர்வமான நீர் பயன்பாடு குறித்து ஆலோசிப்பது கண்காட்சியின் முக்கிய நோக்கம். வேளாண் மேம்பாட்டுக்கு அரசு கொண்டுவந்துள்ள திட்டங்கள், அவற்றைச் செயல்படுத்துவது குறித்தும் கண்காட்சியில் விவாதிக்கப்படும். மண்ணின் தன்மை, வேளாண் உற்பத்தியைப் பெருக்குவது உள்ளிட்டவைகள் குறித்து கண்காட்சியில் விவாதிக்கத் திட்டமிட்டுள்ளோம். கண்காட்சியின் இறுதி நாளில் முதல்வர் சித்தராமையா பங்கேற்கவுள்ளார் என்றார் அவர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஈரோட்டில் அதிக மழை பதிவு</u>**

ஈரோடு : ஈரோட்டில் அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த சில தினங்களாகவே பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக, ஈரோட்டில், 30 மி.மீ., மழையளவு பதிவாகி

உள்ளது. நேற்று முன்தினம் மாலை, 6.45 முதல், 8.15 மணி வரை, கனமழை பெய்தது. மாநகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.நேற்று காலை நிலவரப்படி, கொடிவேரி,3 மி.மீட்டர், கோபி,4.1, சத்திய மங்கலம்,6.1, ஓலப்பாளையம்,26, எலந்தகுட்டைமேடு,8, சென்னிமலை,15, பெருந்துறை,9.5, பவானி,1.4, கவுந்தப்பாடி,24, சிவகிரி,4, புங்கம்பாடி,14.8, முத்தூர்,5, மங்களப்பட்டி,2, காங்கேயம்,6, ஒரத்துப்பாளையம் அணை,18 மி.மீட்டர் மழை பதிவானது.நேற்று காலை முதல் லேசான வெயிலும், அவ்வப்போது, மேகமூட்டமும் காணப்பட்டது.

## <u>13,682 விவசாயிகளுக்கு ரூ.83 கோடி பயிர் கடன்</u>

திருவள்ளூர்: 'திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, வேளாண் கூட்டுறவு சங்கம் மூலம், 13,682 விவசாயிகளுக்கு, 83 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது' என, ஆட்சியர் வீர ராகவ ராவ் கூறினார்.திருவள்ளூரில், 61வது கூட்டுறவு வார விழா நடந்தது. நிகழ்ச்சியில், கூட்டுறவு குறித்து மாணவ, மாணவியருக்கு நடத்திய கட்டுரை, பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும், பயனாளிகளுக்கு, 1.09 கோடி ரூபாய் கடன் உதவிகளையும், பால்வளத் துறை அமைச்சர் ரமணா, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அப்துல் ரகீம் வழங்கினர்.நிகழ்ச்சியில், ஆட்சியர் வீர ராகவ ராவ் கூறுகையில், "மாவட்டத்தில் செயல்படும், 123 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், கடந்த 2013 - 14ம் ஆண்டு, 13,682 விவசாயிகளுக்கு, 83 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டு உள்ளது," என்றார்.மேலும், "1,015 நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் வினியோகிக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மக்கள் சேவை மையம், 123 கூட்டுறவு

சங்கங்களில் விரைவில் தொடங்கி, மக்களுக்கு தேவையான பட்டா, சிட்டா, வருவாய், ஜாதி சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது," என்றார்.

**<u>பஞ்சாமிர்தம் தயாரிக்க தேன்வாழை கொள்முதல் அதிகரிப்பு</u>**

வாழப்பாடி : சபரிமலை ஐயப்பன் சீஸன் துவங்கியதால், பழநிமலை முருகன் கோவிலில் பஞ்சாமிர்தம் விற்பனை சூடுபிடித்துள்ளது. அதனால், பஞ்சாமிர்தம் தயாரிக்க, வாழப்பாடியில் இருந்து, தேன் வாழை ஏற்றுமதி அதிகரித்துள்ளது. வாழப்பாடி பகுதியில், வெள்ளாறு, வசிஷ்ட நதியின் ஆற்றுப்படுகை கிராமங்களிலும், பாப்பநாயக்கன்பட்டி கரியகோயில் அணை, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை பாசன கிராமங்களிலும், 500 ஹெக்டேர் பரப்பளவில், விவசாயிகள், வாழை பயிரிட்டுள்ளனர். அதுமட்டுமின்றி, நாமக்கல் மாவட்டம் சிங்கிலியன்கோம்பை, திம்மநாயக்கன்பட்டி, மத்தூரூட்டு, வேப்பிலைக்குட்டை, ஈஸ்வரமூர்த்தி பாளையம், உரம்பு, தாண்டகவுண்டன்பாளையம், மங்களபுரம், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி, மற்றும் ஆத்தூர் அடுத்த மல்லியகரை, கோபாலபுரம், கீரிப்பட்டி, கடம்பூர், கூடமலை, சீனியம்பட்டி, உலிப்புரம், தம்மம்பட்டி பகுதி கிராமங்களில், 3,000 ஹெக்டேர் பரப்பளவில், வாழை பயிரிடப் பட்டுள்ளது.வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் விளைவிக்கப் படும், பூவன், தேன்வாழை, நேந்திரம், மோரீஸ், மலைவாழை, மொந்தன், ரஸ்தாளி, செவ்வாழை, பச்சைநாடன் உள்ளிட்ட பல்வேறு ரக வாழைத்தார் களை, வாழப்பாடியில் கூடும் தினசரி காய்கறி மார்கெட்டில், விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். பல்வேறு பகுதியை சேர்ந்த வியாபாரிகள், வாழைத்தார்களை கொள்முதல் செய்கின்றனர்.சுவையான பஞ்சாமிர்தம் தயாரிக்க பயன்படும், "தேன்வாழை' வாழப்பாடி பகுதி கிராமங்களில், அதிகளவு விளைவிக்கப்படுகிறது. அது குறித்து தகவலறிந்த, பழநிமலை முருகன் கோவில் பஞ்சாமிர்தம் தயாரிப்பு நிறுவனங்களும், தேவஸ்தான

ஃபோர்டுக்கு வாழைப்பழம் சப்ளை செய்ய டெண்டர் எடுத்த வியாபாரி களும், சில ஆண்டுகளாக, வாழப்பாடியில், தேன்வாழை கொள்முதல் செய்து வருகின்றனர்.தற்போது, "தேன்வாழை' உற்பத்தி சீஸன் துவங்கியதால், வாழப்பாடி தினசரி மார்கெட்டிற்கு விற்பனைக்கு வரத்து அதிகரித்துள்ளது. இந்நிலையில், சபரிமலை ஐயப்பன் கோவில் சீஸன் துவங்கியதால், பழநிமலை முருகன் கோவிலுக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களால், பஞ்சாமிர்தம் விற்பனை சூடு பிடித்துள்ளது.அதனால், வாழப்பாடியில் முகாமிட்டுள்ள வியாபாரிகள், தினசரி மார்க்கெட்டில் வாழைத்தார்களை கொள்முதல் செய்து, "டன்' கணக்கில் எடைபோட்டு, தேன்வாழையை கொள்முதல் செய்கின்றனர். பழநிமலை முருகன் கோவிலுக்கு, வாழப்பாடி தேன்வாழை ஏற்றுமதி துவங்கியதால், வாழை விவசாயிகள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>மேட்டூர் அணையில் 6,000 கனஅடி நீர்திறப்பு</u>**

மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நேற்று மாலை, 6 மணி முதல் வினாடிக்கு, 6,000 கனஅடி நீர்திறக்கப்பட்டது.

டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்தால் வினாடிக்கு, 13,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு, கடந்த, 12ம் தேதி வினாடிக்கு, 7,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. மழை தீவிரம் காரணமாக, 13ம் தேதி பாசன நீர் நிறுத்தப்பட்டது.இந்நிலையில், பருவமழை தீவிரம் குறைந்ததால், நான்கு நாட்களுக்கு பின், நேற்று மாலை, 6 மணி முதல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் திறக்கப்பட்டது.நேற்று அணை நீர்மட்டம், 103.250 அடியாகவும், நீர் இருப்பு, 69.119 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 7,652 கனஅடி நீர் வந்தது.

## பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்வு

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்த மழையால் நிலத்தடி நீர் மட்டம் 20 முதல் 100 அடி வரை உயர்ந்துள்ளது. கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:"திண்டுக்கல் மாவட்டத்தில் அக்டோபரில் மட்டும் 347.29 மி.மீ., மழை பெய்துள்ளது. அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், குடியிருப்புகளில் அமைப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்பு மூலம் நிலத்தடி நீர் மட்டம் 20 முதல் 100 அடி வரை உயர்ந்துள்ளது. வனத்துறை மூலம் கொடைக்கானல், சிறுமலை உள்ளிட்ட பகுதிகளில் 350 தடுப்பணைகள், 150 கசிவுநீர் குட்டைகள், 10 ஆயிரம் நீர்த்தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மலைகளில் பெய்த மழைநீர் முழுவதும் வீணாகாமல் சேமிக்கப்பட்டுள்ளது. விவசாயி நிலங்கள் பயன்பெறும் வகையில் மாவட்டத்தில் 2,000 பண்ணைக்குட்டைகள், 250 சிறிய தடுப்பணைகள், மழை ஓடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மழைநீர் சேமிக்கப்பட்டு விவசாய நிலங்கள் பயனடைந்துள்ளன,' என்றார்.

## விலையில்லா ஆடுகள்

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியம் மயிலாடும்பாறை ஊராட்சியில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. ஊராட்சித் தலைவர் சடையன் தலைமை வகித்தார். கலெக்டர் பழனிசாமி முன்னிலை வகித்து ஆடுகளை வழங்கினார். ஆண்டிப்பட்டி எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், ஆண்டிப்பட்டி தாசில்தார் இளங்கோ, துணைத் தலைவர் ராமர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேனியில் 70 புதிய திராட்சை ரகங்கள்

கம்பம் : தேனி மாவட்டத்தில் சோதனை முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள எழுபது புதிய திராட்சை ரகங்கள் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக திராட்சை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர்

பார்த்திபன் கூறியுள்ளார். சர்வதேச அளவில் திராட்சை சாகுபடியில் தேனி மாவட்டம் முக்கிய இடத்தை பிடிக்கிறது. ஆண்டு முழுவதும் திராட்சை கிடைக்கும் பகுதியாக விளங்குகிறது. தேனி மாவட்டத்தில் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, அணைப்பட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் அதிக பரப்பளவில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்த ரகங்களையே மீண்டும் மீண்டும் சாகுபடி செய்கின்றனர். தற்போது திராட்சை ஆராய்ச்சி நிலையம் சண்முகாநதி அணை அருகில் அமைக்கப்பட்டு வருகிறது. புதிய கட்டடங்கள் கட்டுமானப் பணிகள் துவங்கியுள்ளது. சோதனை முறையில் புதிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பேராசிரியர் பார்த்திபன் கூறியதாவது: புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து 70 புதிய திராட்சை ரகங்களை வாங்கி வந்துள்ளோம். இவற்றை சோதனை முறையில் இங்கு சாகுபடி செய்துள்ளோம். அதில் நமது பகுதிக்கு ஏற்ற ரகங்களை தேர்வு செய்து விவசாயிகளுக்கு வழங்க உள்ளோம், என்றார். திராட்சை சாகுபடியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் நிலை உள்ளதாக திராட்சை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>சிகு ஓடை நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி</u>

தேனி: அன்னஞ்சி அருகே உள்ள சிகு ஓடை கண்மாய் நிரம்பியதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி அருகே அன்னஞ்சியில் உள்ளது சிகுஓடை கண்மாய். வீரப்ப அய்யனார் கோயில் மலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் சிகு ஓடை வழியாக வந்து இந்த கண்மாய் நிரம்பும். சிகு ஓடை கண்மாயில் நீர் திறக்க வேண்டும், என அன்னஞ்சி ஊராட்சி தலைவர் பிரகாஷ், தேனி நகராட்சி முன்னாள் தலைவர் முனியாண்டி உட்பட பலர் பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம்

முறையிட்டனர். இதனை தொடர்ந்து அதிகாரிகள் சிகுஓடையில் தண்ணீர் திறந்தனர். தற்போது இக்கண்மாய் நிறைந்துள்ளது. இதனால் அன்னஞ்சி, வடபுதுப்பட்டி, பொம்மையகவுண்டன்பட்டி, ஊஞ்சாம்பட்டி, உட்பட ஐந்திற்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் பயன் பெறுவார்கள் என விவசாயிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முட்டை விலை 367 காசாக உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 367 காசாக உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் முட்டைக்கு விலை நிர்ணயம் செய்யும் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், முட்டை விலையில் 11 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 367காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த 2 வாரத்தில், முட்டை விலை 50 காசு வரை உயர்ந்துள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்): பெங்களூரு 390, சென்னை 391, மைசூர் 380, ஐதராபாத் 374, மும்பை 410, விஜயவாடா 367, கொல்கத்தா 406, பர்வாலா 385, டெல்லி 400 காசுகள்.

## ஈச்சம்பாடி அணைக்கட்டு பாசனத்திற்காக திறப்பு

அரூர், : தர்மபுரி மாவ ட்டம் கம்பைநல்லூர் கே. ஈச்சம்பாடி அணைக்கட்டு பாசனத்திற்காக திறக்கப்பட்டது. அணைக்கட்டில் தற்போதுள்ள தண்ணீர் வரத்தை கொண்டு, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு அணைக்கட்டு திறக்கப்பட்டது. தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பழனியப்பன் அணைக்கட்டை திறந்து வைத்தார். ஈச்சம்பாடி அணை 17.35 அடி உயரம், 37 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது. அணையின் மொத்த பாசன பரப்பு 6 ஆயிரத்து 250 ஏக்கர் ஆகும், வலதுபுற கால்வாய் 30.30 கிமீ, இடதுபுற கால்வாய் 26.15 கிமீ தூர மும் கொண்டது. இதன் மூலம் தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத் தில் அக்ரஹாரம், ஈச்சம் பாடி, கெட்டுப்பட்டி, சாம ண்டஅள்ளி உள்பட 10 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் பெரியகுட்ட குளம், பச்சனாம் பட்டி, சொரக்காப்பட்டி, வெள்ளாளப்பட்டி, வேல ம்பட்டி, மேட்டுத்தாங்கள், கொல்லப்பட்டி உட்பட 21 கிராமங்களும் பயன் பெறும். மொத்தம் 31 கிராமங்களில் 6250 ஏக்கரில் பயிரிடப்பட்டுள் நெல், வாழை, தென்னை, கரும்பு, பருத்தி, மரவள்ளி கிழங்கு உள்ளிட் டவை பயன்பெறும். இதில், வலது மற்றும் இடது புற கால்வாய்களின் வழியாக வினாடிக்கு 35 கன அடி 120 நாட்களுக்கு முறை வைத்து நீர் திறக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் கலெக்டர் விவேகானந்தன், சட்ட மன்ற உறுப்பினர் அன்பழகன், மாவட்ட செயலாளர் பூக்கடை முனுசாமி ஒன்றிய செயலாளர்கள் குப்புசாமி, முருகன், பொதுபணித்துறை செயற்பொறியாளர் உதவி செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், அரூர் கோட்டா ட்சியர் ஷகிலா, ஒன்றிய குழு தலைவர் தென்னரசு, மாவட்ட ஊராட்சி குழு

உறுப்பினர் முருகன், தாசி ல்தார் பொன் தமிழ்செல்வி, ஊராட்சி மன்றத்தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னாறு அணையில் விரைவில் நீர் திறப்பு

பாலக்கோடு, : பஞ்சப்பள்ளி சின்னாறு அணை யில் இருந்து விரைவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளதால், ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகள் தீவிர மாக நடைபெற்று வருகிறது. தர்மபுரி மாவட்டம் பஞ்சப்பள்ளி அருகே, 50 அடி உயரம் கொண்ட சின்னாறு அணை உள்ளது. இதில், தற்போது 43.5 அடி தண்ணீர் உள்ளது. அணையில் இருந்து 2 கால்வாய் வழியாக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஒரு கால்வாயில் திறந்து விடப்படும் தண்ணீர், அகதிகள் முகாம் மேற்கு பகுதி வழியாக செங்கன் பசவன் தலாவ் ஏரிக்கு சென்று சேரும். மற்றொரு கால்வாய் அகதிகள் முகாம் கீழ்ப்பகுதி வழியாக பஞ்சப்பள்ளி, ஏரி பஞ்சப்பள்ளி, ஏழுகுண்டூர், இருளர் கா லனி, அத்திமுட்லு வழியாக குமாரசாமிசெட்டி ஏரிக்கு சென்று சேரும். தற்போது சின்னாறு அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட பொதுப்பணி த்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். அடுத்த வாரத்தில் தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை யொ ட்டி, கால்வாய்களை தூர் வாரும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. கால்வாய் ஓரங்களில் ஆக்கிரமித்து குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்புக ளை அகற்ற வேண்டும் என வும், குழந்தைகளை கால் வாய் ஓரங்களில் நடமாட அனுமதிக்க கூடாது எனவும் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தில் 202 கிராம குளங்கள் சீரமைப்பு

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ், 202 கிராம குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளது. 700 குட்டைகளும் அமைக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் கிராமத்திற்கு தேவையான குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். திருச்சி

மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை மற் றும் இயற்கை வளமேம் பாட்டு திட்டத்தின்கீழ், கிராம குளங்களை மேம்படுத்தியும், புதிய குளங்கள், கசிவு நீர், குட்டைகள், தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், கால் நடை குட்டைகள், அமு ங்கு குட்டைகள் போன்ற நீர் ஆதாரப் பணி ளை உருவாக்கியும், கிடைக்கின்ற மழைநீரை சேமித்து அதன்மூலம் நிலத்தடிநீர் மட்டம் மேம்படுத்தப்பட்டும் வருகிறது. இதில், மணப்பாறை ஒன்றியம் கே.பெரியப் பட்டி கிராமத்தில் ரூ.2.50 லட்சம் செலவில் கிராம குளம் சீரமைக்கப்பட்டுள் ளது. இப்பணிகளை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குநர் லட்சுமணன், உதவி செயற்பொறியாளர் பிரசாத், உதவி வேளாண் இயக்கு னர் கண்ணன் ஆகியோர் பார்வையிட்டு, விவசாயிகளுடன் கலந்துரையாடி னர். இப்பணிகள் குறித்து கே.பெரியபட்டி ஊராட் சித் தலைவர் செல்வராஜ் கூறுகையில்,இக்கிராம குளம் சீரமைக்கப்பட்ட பின்னர் இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததோடு, கிராமத்திற்கு நீர் ஆதாரமான ஆழ்குழாய் கிணறு மூலம் தொடர்ந்து கிராமத்திற்கு தேவையான குடிநீர் தட்டு பாடின்றி கிடைக்கிறது என்றார். நீர்வடிப்பகுதி மேம் பாட்டு முகமை உதவி செயற்பொறியாளர் பிர சாத் கூறுகையில், இந்த கிராமக்குளம் சீரமைக்கப்பட்ட பின்னர் இக்குளத் தில் கூடுதலாக தண்ணீர் சேமிக்கப்படுகிறது. மேலும், இந்த குளத்தில் மழைநீரை நிலத்தடி நீர் படுகைக்கு அனுப்பும் வகையில் 205அடி ஆழம் ஆழ்குழாய் கிணறு அமை க்கப்பட்டு, இக்கிணற்றில் வண்டல்மண் படியாத வகையில் மழைநீர் நேரடி யாக ஆழ்குழாய் கிணற் றுக்கு செல்லாத வகையில் வடிகட்டி அனுப்பப்படுகி றது. இதில் சராசரியாக, இதுபோன்று மழைநீர் நிலத்தடிநீர் படுகைக்கு சென்று நீர்மட்டம் உயர 15நாள் முதல் 20 நாள் வரை ஆகும். ஆனால் இத்திட்டத்தின் மூலம் மழைநீர் விரைவாக நிலத் தடி நீர் நீர்படுகைக்கு செல்கிறது. இத்திட்டம் செயல் படுத்தப்பட்ட கிராமங்களில் 6அடி வரை

நிலத்தடி நீர் உயர்ந்துள் ளது என்றார். மேலும் மருங்காபுரி ஒன்றியம், நாட்டார்பட்டி கிராமத்தில் ரூ.2.83 லட் சம் செலவில் கசிவுநீர் குட்டை செயல்படுத்தப் பட்டு வருகிறது. நீர்வடிப்பகுதியான ஓடைகள் ஒன்று சேரும் இடத்தில் இக் கசிவு நீர்குட்டை அமைக்கப்பட்டு வருகிறது.இக்குளங்களைப் போல் மண் கரைகள் அமைத்து, வடிகால் வசதியுடன் இக்கசிவுநீர் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அண்மையில் பெய்த மழையில் இக்கசிவுநீர் குட்டை முழுவதும் மழை நீர் சேகரிக்கப்பட்டு இருப் பதை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அதிகாரிகளிடம் விவசாயிகள் கூறுகையில், இந்த குட்டை அமைக் கும் முன்பு எங்கள் பகுதி யில் நிலத்தடி நீர்ஆதாரமே கிடையாது. 400அடி வரை ஆழ்குழாய் கிணறு அமை த்தும் நீர் ஆதாரம் கிடைக்கவில்லை. எங்கள் பகுதி யில் கடந்தமுறை கரும்பு பயிரிட்டு தண்ணீர் இல் லாமல் முற்றிலும் பா திக்கப்பட்டது. இந்தக் குட்டையில் மழைநீர் தேங்கிய பின்னர் எங்கள் பகுதியில் உள்ள அத்தனை கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கிணற்றில் 7.5 எச்.பி. மின்மோட்டார் மூலம் தொடர் ந்து நீரை எடுத்தாலும், கிணற்றில் நீர்வடிவதில்லை. இந்த கசிவுநீர் குட்டை மூலம் இப்பகுதியில் 200 ஏக்கர் பரப்பளவிற்கு பாசனத்திற்கு தேவையான நீர்ஆதாரம் கிடைத்துள்ளது என்றார். நீர்வடிப்பகுதி மேம் பாட்டு முகமை துணை இயக்குநர் லட்சுமணன் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை மற்றும் இயற்கை வளமேம்பாட்டு திட்டத்தின்கீழ், கடந்த 3ஆண்டுகளில் ரூ.2.48 லட்சம் செலவில் 246 தடுப்பணைகளும், ரூ.60 லட்சம் செலவில் 42கசிவு நீர் குட்டைகளும், ரூ.52 லட்சம் செலவில் 118 பண் ணைக் குட்டைகளும், ரூ.135லட்சம் செலவில் 540அமுங்கு குட்டைக ளும், ரூ.135லட்சம் செல வில் 202 கிராமக்குளங்க ளும் சீரமைக்கப்பட்டுள்ள தாக தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் பொருட்கள் வேளாண்துறையினர் தகவல்

பழநி, : விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண்பொருட்கள் வழங்கப்பட உள்ளதாக வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். பழநி பகுதியில் கடந்த சில தினங்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் வேளாண் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. வேளாண்துறையினர் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை மற்றும் பொருட்கள் வழங்கி வருகின்றனர். விதை கிராம திட்டத்தின்கீழ் விதைகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. உளுந்து, தட்டை, பாசிப்பயிறு போன்ற பயறு வகைகளுக்கான விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.20 மானியமாக வழங்கப்படுகிறது. என்.ஏ.டி.பி திட்டத்தின் கீழ் விதை நெல்லிற்கு கிலோவிற்கு ரூ.5 மானியமாக வழங்கப்படுகிறது. ஐயம்வார்ம் திட்டத்தின் கீழ் தெளிப்பான்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஐகாப் திட்டத்தின்கீழ் களை எடுக்கும் கருவிக்கு ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்து திட்டத்தின்கீழ் உயிர் உரங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. பயனடைய விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## விளைச்சல் பாதிப்பால் கொத்தமல்லி கட்டு விலை உயர்வு

சேலம், : கொத்தமல்லி விளைச்சல் பாதிப்பால் சேலம் மார்க்கெட்டில் ஒரு கட்டு கொத்தமல்லி தி10 முதல் தி15 என விலை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாமக்கல், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பல ஆயிரம் ஏக்கரில் கொத்தமல்லி சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் மல்லூர், தலைவாசல், ஆத்தூர், வாழப்பாடி, தம்மம்பட்டி, மேச்சேரி, ஓமலூர் ஆகிய பகுதிகளில்

கொத்தமல்லி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கொத்தமல்லி அமோக விளைச்சலை தரும். கடந்த இரு மாதமாக பெய்து வரும் மழையால் கொத்தமல்லி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சேலம் மார்க்கெட்டுக்கு கொத்தமல்லி கட்டு வரத்து சரிந்ததால் விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ஒரு கட்டு கொத்தமல்லி தி20 என விற்றது. நேற்று நிலவரப்படி ஒரு கட்டு கொத்தமல்லி தி10 முதல் தி15 என விற்பனை செய்யப்பட்டது.

## அதிக வருவாய் ஈட்டித் தரும் சுருள் பாசி வளர்ப்பது எப்படி? வம்பனில் நாளை சிறப்பு பயிற்சி

ஆலங்குடி, : குறைந்த செலவில் அதிக வருவாயை ஈட்டித்தரும் ஸ்பைருலினா என்ற சுருள்பாசி வளர்ப்பது எப்படி? என்பது குறித்து ஆலங்குடி அடுத்த வம் பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் நாளை (19ம் தேதி) சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுகுறித்து அறிவியல் மையத்தின் தலைவர் ஞானமலர் வெளி யிட்ட செய்திக்குறிப்பு: ஸ்பைருலினா என்ற சுருள் பாசியை வளர்க்கும் நவீன தொழில்நுட்பம் குறித்த சிறப்பு பயிற்சி முகாம் நாளை (19ம் தேதி) காலை நடைபெறுகிறது.ஸ்பைருலினா என்பது ஒரு செல் புரதம் கொண்ட சுருள் வடிவிலான நீல பச்சை பாசி ஆகும். ஊட்டச்சத்து நிறைந்தது. மற்ற உணவு களை விட 65 முதல் 70 சதவிகிதம் வரை புரத சத்து இதில் அதிகமாக உள்ளது. பீட்டா கரோட்டின் உள்ளிட்ட தாது உப் புகள் மற்றும் உயிர் சத்துகள் நிறைந்தது. இதை சுகாதார முறையில் வளர்த்து ஆரோக்கியமான கால் நடை தீவனம் மற்றும் மீன் உணவாகப் பயன்படுத்தலாம். மிக குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்ட ஸ்பைருலினா என்ற சுருள் பாசியை அனைவரும் வளர்க்கலாம். மேலும் ஸ்பைருலினாவை மனித உணவாகவும் உபயோகப்படுத்தலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள்,

கால்நடை வளர்ப்போர், தொழில் முனைவோர் ஆகியோருக்கு இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஏதுவாக வம்பனில் உள்ள வேளாண் மை அறிவியல் மையத்தில் நாளை (19ம் தேதி) காலை சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. மேலும், குறைந்த செலவில் ஸ்பைரு லினா வளர்க்கும் தொழிற்நுட்பம் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட உள்ளது. எனவே, ஆர்வமுள்ள அனைவரும் இம்முகாமில் பங்கேற்று பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு வேளாண் அறி வியல் மையத்தை நேரடியாகத் தொடர்புகொள்ள லாம் என்றார்.

## 3 ஆண்டுகளில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ரூ.12 ஆயிரம் கோடி பயிர்க் கடன்

புதுக்கோட்டை, : 61 வது அனைத்திந்திய கூட்டு றவு வார விழா புதுக்கோட் டை டிவிஎஸ் கார்னர் அருகேயுள்ள எஸ்எஸ் மகாலில் கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது. விழாவைத் துவக்கிவைத்த அமைச்சர்கள் சுப்பிரமணியன், விஜயபாஸ்கர் ஆகியோர் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் இதையொட்டி, நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கிப் பேசினர். விழாவில் அமைச்சர் சுப்பிரமணியன் பேசியதாவது: பொதுமக்களுக்கு குறைந்த வட்டியில் கடன்களும், குறைந்த விலையில் உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன. நமது மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் கடன்பெறும் தகுதியை உயர்த்திட 2012-13ம் ஆண்டில் நபர் ஒன்றுக்கு ரூ.2500 வீதம் 500 உறுப்பினர்களுக்கு ரூ.12.50 லட்சம் பங்கு மூலதனம் மானியம் வழங்கப்பட்டது. மேலும் 2011 முதல் 2014 வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு 5 ஆண்டு சம தவணைகளில் திரும்ப செலுத்தும் வகையில் வட்டியில்லா பங்கு மூலதன கடனாக 400 பேருக்கு தலா ரூ.250 வீதம் ரூ.1 லட்சம் வழங்கப்

பட்டுள்ளது. விவசாயிகளின் விலை பொருட்களுக்கு சந்தையில் நியாயமான விலை கிடைக் கும் வகையில் தானிய ஈட்டுக் கடனாக ரூ.9.99 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார். விழாவில் அமைச்சர் விஜயபாஸ்கர் பேசுகையில், நமது மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க 2013-14ம் ஆண்டுக்கு ரூ.110 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதில் 20,510 விவசாயிகளுக்கு ரூ.60.12 கோடி வீதம் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மேம் பட வட்டியில்லா கடனாக 2014-15ம் ஆண்டுக்கு ரூ.90 லட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 203 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.45 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் மகளிர் சுயதொழில் செய்து மேம்பாடு அடைய 341 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.7.83 கோடி வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 30 லட்சத்து 2 ஆயிரத்து 420 விவசாயிகளுக்கு ரூ.12 ஆயிரத்து 165.23 கோடி வீதம் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றார். விழாவில் எம்எல்ஏக்கள் கார்த்திக் தொண்டைமான், கு.ப.கிருஷ்ணன், வைர முத்து, ராஜநாயகம், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் செல்லத்துரை, மாவட்ட ஊராட்சி தலைவர் ராமை யா, மண்டல இணைப் பதிவாளர் குமார், துணைப் பதிவாளர் மற்றும் மேலாண் இயக்குநர் பால்வடிவு, நகர்மன்றத் தலைவர் ராஜசேகரன், துணைத் தலைவர் சேட்டு, கூட்டுறவு ஒன்றியத் தலைவர் சின்னத்தம்பி, கவுன்சிலர் பாஸ்கர், கூட் டுறவு அச்சக சங்கத் தலைவர் குமார், நகர கூட்டுறவு வங் கித் தலைவர்கள் மாரிமுத்து, சிவசண்முகம், அனைத்து

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள், தாசில்தார் கதிரேசன், நகர் மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## <u>சின்னமனூர் ஏலச்சந்தையில் வெண்டைக்காய் கிலோ ரூ.8 மூன்று நாட்களில் இருமடங்காக அதிகரிக்கும்</u>

சின்னமனூர், : சின்னமனூர் ஏலச்சந்தையில் உற்பத்தி அதிகரிப்பால் வெண்டைக்காய் கிலோ ரூ.8 ஆக குறைந்தது. சிக்கன் மட்டன் ஒதுக்கப் பட்டதால் இன்னும் மூன்று நாட்களில் ஐய்யப்பன் கோயில் சீஸன் துவங்கியவுடன் காய்கறிகளின் விற்பனை இரு மடங்காக உயரும் நிலை உள்ளது. சின்னமனூர் பகுதிகளில் 4 ஆயிரம் ஏக்கரில் வருடத்தில் இருபோகம் நெல் சாகுபடி முல்லைபெரியாற்று பாசனத்தில் நடந்து வருகிறது. ஆழ்குழாய் கிணற்று பாசனத்தில் அனைத்து விதமான காய்கறிகள் வருடம் முழுவதும் தொடர் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். விளைவித்து எடுக்கப்படுகின்ற காய்கறிகளை விவசாயிகள் சின்னமனூர் ஏலச்சந்தைகளுக்கு கொண்டு வருகின்றனர். தேனி மாவட்ட, கேரளா மாநில வியாபாரிகள் வருகை புரிந்து குவித்து வைக்கப்படும் காய்கறிகளையும் ஒவ்வொன்றாக ஏலத்தில் எடுத்து மூடை களாக தயார் செய்கின்றனர். லாரிகள், மின்டெம்போ, ஆட்டோக்களில் ஏற்றி லோடு கணக்கில் எடுத்து செல்லப்படுகிறது. வடகிழக்கு பருவ மழை கைகொடுத்ததால் அனைத்து காய்கறிகளும் உற்பத்தி அதிகரித்துள்ளது. இன்னும் 3 நாட்களில் சபரிமலை ஐய்யப்பன்கோயில் பக்தர்கள் விரதம் கடைப்பிடித்து மாலை போடுவதற்கு கார்த்திகை பிறப்பதற்காக காத்திருக்கின்றனர். அப்போது காய்கறிகளின் தேவை அதிகரிக்கும். சிக்கன், மட்டன், முட்டை என பல அய்ட்டங் களை ஓரம் கட்டி காய்கறிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் காய்கறி விலை கூடுவதற்கு வாய்ப்பு உள்ளது. நேற்று ஏலச்சந்தையில் காய் கறிகள் 60 டன் வரையில் ஒரே

நாளில் விற்று தீர்ந்தது. வடகிழக்கு பருவ மழையால் நோய்தாக்குதல் இல்லாமல் உற்பத்தி அதிகரித் துள்ளதால் கிலோ ரூ.40க்கு விற்கப்பட்ட வெண்டைக்காய் கிலோ ரூ.8 ஆக குறைந்தது. சில காய் கறிகள் விலை குறைந்தும் சில காய்கறிகள் விலை அதிகரித்தும் இருந்தன. அவரைக்காய் ரூ.20 முதல் 30 ஆகவும், சீனிஅவரக்காய் ரூ.10, மிளகாய் ரூ.26, தட்டாம் பயறு ரூ.15, புடலங்காய் ரூ.15, மொச்சை ரூ.35 என விற்கப்பட்டது. ரூ.12க்கு விற்கப்பட்ட சின்ன உள்ளி ரூ.20 ஆனது, முருங்கை ரூ.30, 15 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி ரூ.130 ஆனது. இன்னும் 3 நாட்களில் கார்த்திகை பிறந்தவுடன் ஐய்யப்பன்கோயில் சீஸன் துவங்கி விட்டால் வழக்கமாக விற்பதை காட்டிலும் 2 மடங்கிலிருந்து 3 மடங்கு விலை அதிகரிக்கும். குறிப்பாக நாள் ஒன் றுக்கு 120 டன் என அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தி அதிகரித்து இருந்தாலும் விலையில் சற்று ஏற்றம் இருக்கும் என விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்க்கின்றனர்.

## <u>விளைச்சல் அதிகரிப்பால் தக்காளி விலை ரூ10ஆக சரிவு</u>

சேலம், : தமிழகத்தில் சேலம், தர்மபுரி மாவட்டத்தில் தான் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளி பல மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. சேலம், தர்மபுரி மாவட்டத்தில் கடந்த இரு மாதமாக பெய்துவரும் மழையால், தக்காளி அமோக விளைச்சலை தந்துள்ளது. இதனால் மேச்சேரி, பாலக்கோடு, ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டுக்கு வழக்கத்தை விட தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இதனால் தக்காளி விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு கிலோ தக்காளி ரூ15 என விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை படிப்படியாக குறைந்து, நேற்று ஒரு கிலோ ரூ8 முதல் ரூ10 என விற்பனை செய்யப்பட்டது.

## விவசாய விளை பொருட்கள் ரூ.15.92 லட்சத்துக்கு ஏலம்

பவானி, : பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.15.92 லட்சத்துக்கு விவசாய விளை பொருட்கள் ஏலம் போனது. அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நேற்று நடைபெற்றது. அம்மாபேட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர். 4,759 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டதில், சிறியது ரூ.4.50க்கும், பெரியது ரூ 15க்கும் என மொத்தம் ரூ. 32 ஆயிரத்து 840க்கு ஏலம் போனது. கொப்பரை தேங்காய் 29 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில், குவின்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.7515க்கும், அதிகபட்ச விலையாக ரூ.9292க்கும் என மொத்தம் ரூ. 33 ஆயிரத்து 366க்கு விற்பனையானது. 153 மூட்டைகளில் கொண்டுவரப்பட்ட நெல்லில், பொன்னி ரகம் குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.2075க்கும், அதிகபட்ச விலையாக ரூ.2150க்கும், ஏ.டி.டி. ரகம் குவின்டால் ரூ.1,600 முதல் ரூ.1700 வரை என மொத்தம் ரூ. 2 லட்சத்து 15 ஆயிரத்து 777க்கு ஏலம் போனது. எள் 6 மூட்டை வந்ததில் குவின்டால் ரூ.6889 முதல் ரூ.9839 வரை மொத்தமாக ரூ.34 ஆயிரத்து 298க்கு விற்பனையானது. 28 மூட்டைகளில் கொண்டுவரப்பட்ட மக்காச்சோளம் குவின்டால் ரூ.1149 முதல் ரூ.1152 வரை என மொத்தம் ரூ.18,707க்கு விற்பனையானது. நிலக்கடலை 1170 மூட்டைகள் வந்ததில் பச்சைக்கடலை குவின்டால் ரூ.1750 முதல் ரூ.2100 வரையும், காய்ந்த கடலை ரூ.3300 முதல் ரூ.5050 வரையும் என மொத்தம் ரூ.12 லட்சத்து 56 ஆயிரத்து 975க்கு ஏலம் போனது. மொத்த வர்த்தகம் ரூ.15 லட்சத்து 92 ஆயிரத்து 66க்கு நடைபெற்றது.

## பச்சை நிற ரோஜாக்கள் சுற்றுலா பயணிகள் ரசிப்பு

ஊட்டி, : ஊட்டி ரோஜா பூங்காவில் அரிய வகை ரோஜா மலரான பச்சை ரோஜா பூத்துள்ளதால், சுற்றுலா பயணிகள் அதனை கண்டு ரசித்து செல்கின்றனர். ஊட்டி ரோஜா பூங்கா வில் 3 ஆயிரத்து 800 வகை ரோஜா வகைகளும், 30 ஆயிரம் ரோஜா செடிகளும் உள்ளன. மேலும், வனப்பகுதிகளில் காணப்படும் ரோஜா செடிகள் மற்றும் நாட்டு வகை ரோஜா மலர் செடி களும் ஆசியாவிலேயே முதன் முறையாக இங்கு நடவு செய்யப்பட்டுள்ளன. பூங்காவின் ஒரு பகுதியில் இருந்த தேயிலை செடிகள் மற்றும் மரங்களை அகற்றிவிட்டு தற்போது 2 ஏக்கர் பரப்பில் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2015 மே மாதம் நடக்கவுள்ள ரோஜா கண்காட்சிக்காக அடுத்த மாதத்திற்கு மேல் ரோஜா செடி கள் அனைத்தும் கவாத்து செய்யும் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன. இந்நிலையில், ஊட்டியில் கடந்த சில மாதங்களாக பெய்து வரும் மழையின் காரணமாக பூங்காவில் அனைத்து பகுதிகளிலும் ரோஜா மலர்கள் பூத்து சுற்றுலா பயணிகளை கவர் ந்து வருகிறது. குறிப்பாக, ரோஜா பூங்காவில் அரிய வகை ரோஜாவான பச்சை நிற ரோஜா மலர்கள் அதி களவு பூத்துள்ளன. பூங்காவின் நுழைவு வாயில் பகுதி யில் பூத்துள்ள இம்மலர் களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கின்றனர்.

## அமராவதி பாசன பகுதியில் மஞ்சள் சாகுபடி துவக்கம்

கரூர், : அமராவதி பாசன பகுதியில் மஞ்சள் சாகுபடி துவங்கியுள்ளது. கரூர் தாலுகாவில் அமராவதி பாசன பகுதிகளான பெரியஆண்டாங் கோயில், மொச்சக்கொட்டாம்பாளையம், கோவிந்தம்பாளையம், உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சள் பயிரிடப்பட்டிருக்கிறது. அமராவதி ஆற்றுப்பாசன பகுதியான செட்டிபாளையம், அப்பிபாளையம், கருப்பம்பாளையம், ஆண்டாங்கோயில் புதூர், பெரியஆண்டாங்கோயில். விசுவநாதபுரி

பகுதியில் முன்பு ஆண்டில் 20 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்யப்பட்டது. அமராவதி அணையில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் ராஜவாய்க்கால் மூலம் பாசனத்திற்காக வந்த நீர்பயனுள்ளதாக இருந்தது. கடந்த ஆண்டு போதுமான தண்ணீர் வரவில்லை. இதனால் கிணற்றுப்பாசனத்தில் மட்டுமே மகசூல் ஆனது. தற்போது மழை மற்றும் வாய்க்காலில் நீர்வரத்து காரணமாக மஞ்சள் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். மஞ்சள் பயிருக்கு தண்ணீர் போதுமான அளவுக்கு வரவேண்டும். நடவுக்கு முன்பும் பின்பும் மஞ்சள் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு மண்ணின் தன்மைக்கேற்ப வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டியதிருக்கிறது. கடந்த இரு ஆண்டாக கரூர் மாவட்ட ஆயக்கட்டு பகுதிக்கு கிடைக்க வேண்டிய அமராவதி நீர் முறையாக கிடைக்கவில்லை. மழையும் பொய்த்துப்போய் விட்டது. இதனால் சாகுபடி பரப்பும் குறைந்துவிட்டது. ஆனால் இந்த ஆண்டு வாய்க்கால் பாசனத்தில் மஞ்சள் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து மழை பெய்வதாலும், நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்வதாலும் விளைச்சல் நன்றாக இருக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## <u>பனிக்காலங்களில் நோய்களில் இருந்து செம்மறி ஆடுகளை பாதுகாக்க ஆட்டுப்பட்டி பராமரிப்பு முறைகால்நடை துறையினர் விளக்கம்</u>

அரவக்குறிச்சி, : பனிக்காலங்களில் செம்மறி ஆடுகளுக்கு ஏற்படும் நோய்களில் இருந்து பாதுகாக்க ஆட்டு பட்டி பராமரிப்பு முறைகள் பற்றி விழிப்புணர்வு கருத்துக்களை விவசாயிகளுக்கு கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.அரவக்குறிச்சி பகுதியில் விவசாயம் மட்டுமல்லாமல் ஏராளமான விவசாயிகள் ஆடு வளர்த்து ஜீவனம் நட த்தி வருகின்றனர். தற்போது அரவக்குறிச்சி பகுதியில் மழையை தொடர்ந்து பனிக்காலம் தொடங்கியுள்ளது. பனி ஆரம்ப காலத்திலேயே

அதிகமாக உள்ளது. இத னால் செம்மறி ஆடுகளுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பனிக்கால நோய்களிலிருந்து ஆடுகளை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது எவ்வாறு என்பது பற்றி கரூர் கால்நடை பராமரிப்புத் துறையினர்கூறியதாவது:

பனி அதிகமான காலங்களில் செம்மறி ஆடுகளை பனிக்கால நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு ஆட்டுப்ப ட்டி பராமரிப்பு மிக முக்கியகும். பட்டி சரியாக அமைக்காவிட்டால் ஆடுகளுக்கு சளி, இருமல், வாய்ப்புண் நோய், புழு புண், குட்டிகளில் வளர்ச்சி குன்றுதல் காரணமாக ஆடுகள் இறந்து போக வாய்ப்புள்ளது. இதனல் ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படும். இவற்றை தடுக்க ஆடுகள் எண்ணிக்கைக்கு ஏற்ப பட்டி தரம்புகள் விசாலமாக அமக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒரு ஆட்டுக்கு 4 சதுர அடி இடைவெளி விட வேண்டும். பட்டிக்கு மூன் றில் ஒரு பங்கு அளவு மட் டும் சாக்கு படுதா போடுதல் போதுமானது. காலையில் பட்டிக்குள் இளம் வெயில் விழும்படி கிழக்குப் பகுதியில் வெற்றிடம் விட வேண்டும். தென்னந்தோப்பு, மாந்தோப்பு போன்ற ஈரப்பதமான இடங்களில் பட்டி அமைக்கக் கூடாது. மேடான இடத்தில் பட்டி அமைக்க வேண்டும். பட்டி தரம்புகளின் சுற்றுப்பகுதி, சாலை மற்றும் பெரிய ஆடுகளின் மீதும் 15 நாட்களுக்கு ஒரு முறை பியூடாக்ஸ் எனும் மருந்தை ஒரு லிட்டர் நீரில் ஒரு மில்லி கலந்து கை தெளி ப்பான் மூலம் தெளிப்பது நல்லது. இதனால் வாய்ப்புண் நோயை பரப்பும் பூச்சிக்கடி மற்றும் புற உண்ணிகளை தவிர்க்கலாம். மாலையில் வேம்பு, யூக்கலிப்டஸ், தும்பை மற்றும் இலை சருகுகள் கொண்டு பட்டிக்கு புகை போடலாம். இது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து ஆடு வளர்க்கும் விவசாயிகள் ஆடுகளை இந்த பனிக்கால நோய்களிலிருந்து பாதுகாத்து நஷ்டத்தை தவிர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு அதில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## முல்லைப்பெரியாறு உபரி நீரை வைகை அணையில் தேக்க நடவடிக்கை

மதுரை, : முல்லைப் பெரியாறு அணை 142 அடியை எட்டுவதால் உபரி நீரை வைகை அணை மற்றும் காய்ந்து கிடக்கும் கண்மாய்களில் நிரப்ப பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். வடகிழக்கு பருவமழை நீடிப்பதால், முல்லைப்பெரியாறு அணை 141 அடியை தொட்டு, எந்த நேரமும் 142 அடியை எட்டும் நிலையில் உள்ளது. அதற்கு மேல் வரும் உபரி நீரை கேரளாவிற்கு செல்லவிடாமல், வைகை அணையில் கூடுதலாக தேக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். பெரியாறு அணையில் தற்போது வினாடிக்கு 456 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 1,855 கன அடி வரை தண்ணீர் திறக்கலாம். அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயரும்போது, உபரிநீர் வைகை அணைக்கு திறந்துவிடப்படும். 71 அடி உயரமுள்ள வைகை அணையில் நேற்றைய நிலவரப்படி 50.23 அடி நீர்மட்டம் உள்ளது. உபரிநீர் வரும்போது வைகை அணை விரைவில் நிரம்ப வாய்ப்புள்ளது. இந்நிலை யில், வைகையில் நேற்று முதல் தண்ணீர் திறக்கும் அளவு 1,860 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், வைகை அணையில் தண்ணீர் அதிகரிக்கும்போது, மதுரை மாவட்டத்தில் காய்ந்து கிடக்கும் பெரிய கண்மாய்களில் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வறண்டு கிடக்கும் கண்மாய்களில் முல்லைப் பெரியாறின் உபரிநீரை தேக்குவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அரும்பாவூர், வெங்கலம் ஏரிகளை தொடர்ந்து வெண்பாவூர்-வடக்கலூர் ஏரிகளும் நிரம்பி வழிகிறது

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் அரும்பாவூர், வெங்கலம், பாண்டகப்பாடி ஏரிகளைத்தொடர்ந்து வெண்பாவூர், வடக்கலூர் ஏரிகளும் நிரம்பி வழிகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் மொத்தம் 73 ஏரி கள் உள்ளன. மாவட்ட அளவில் கடந்த 11, 12, 13, 14 ஆகியத் தேதிகளில் தொடர்ச்சி யாக நல்லமழை பெய்தது. குறிப்பாக வேப்பந்தட்டை தாலுகாவில் நல்லமழை பெய் தது. இதனால் அரும்பாவூர் பெரியஏரி, வெங்கலம் சின்னஏரி, பாண்டகப்பாடி ஏரி ஆகிய 3 ஏரிகள் கடந்த 14ம்தேதி முதல் நிரம்பி வழிந்து வருகின்றன. நிரம்பி வழிந்த தண்ணீரைக் கொண்டும், ஓடைகளில் வந்துசேர்ந்த தண்ணீரைக் கொண்டும் மேலும்சில ஏரிகள் 100சதவீதக் கொள்ளவை எட்டிவருகின்றன. இந்நிலை யில் நேற்று வேப்பந்தட்டை அருகேயுள்ள வெண்பாவூர் ஏரி நிரம்பி வழியத் தொடங்கியுள்ளது. அதேபோல குன்னம் தாலுகா, வடக்கலூர் ஏரியும் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளது. இதனிடையே தொடர் மழையில் சிறிது தொய்வு ஏற்பட்டு வானம் காய்ந்து கிடப்பதால் நிரம்பும் நிலையில் இருந்த ஏரிகள் அப்படியே நின்று விட்டன. சிலதினங்களில் மீண்டும் வடகிழக்குப் பருவமழை பெய்யத் தொடங்கினால் மேலும் பலஏரிகள் நிரம்பி வழியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையே ஏரிப்பாசன விவசாயிகளும் நம்பிக் காத்திருக்கின்றனர். அடுத்தகட்டமாக பெரம்பலூர் மாவட்டத்தில் தேனூர்ஏரி, நெற்குணம்ஏரி, தொண் டமாந்துறை, பில்லங்குளம், வெங்கனூர், எழுமூர், ஆய்குடி, கை.களத்தூர் ஆகிய ஏரி கள் நிரம்பி வழியுமென்ற எதிர்பார்ப்பில் உள்ளது.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி

பாடாலூர், : புஜங்கராயநல்லூரில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. ஆலத்தூர் தாலுகா புஜங்கராயநல்லூர் கிராமத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சான்று விதை உற்பத்தி தொழில் நுட்ப பயிறசி நடை பெற்றது. ஆலத்தூர் வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். ஆலத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் வெண்ணிலா, உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை துணை இயக்குனர் ஆறுமுகம், விதைச்சான்று வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி ஆகியோர் சான்று, விதை உற்பத்தி, விதை நேர்த்தி, உயிர் உர நேர்த்தி கலவன் எடுத்தல், அறுவடைக்குப்பின் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் பற்றிய பேசினர். பயிற்சியில் புஜங்கராயநல்லூர் கிராமத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். முடிவில் ஆலத்தூர் துணை வேளாண் அலுவலர் ராமச்சந்திரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ராஜூ, ராஜ்குமார், மணிகண்டன், கலியபெருமாள் ஆகியோர் செய்திருந்தனர்.

## தென்னையை தாக்கும் தஞ்சை வாடல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை

சேதுபாவாசத்திரம், : தென்னையை தாக்கும் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகள் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னையை தாக்கும் நோய்களில் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகள் நோய் முக்கியமானதாகும். தஞ்சை வாடல்நோயானது தென்னையின் தண்டுப்பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த

சாறு வடியும். வாடல் நோய் தாக்கப்பட்ட மரத்தின் அடிமட்டைகள் பழுப்பு நிறமடைந்து காய்ந்து தொங்கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இதை கட்டுப்படுத்த வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்று க்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50 கிலோ தொழுஉரம் மற்றும் 5 கிலோ வேப்பம்புண் ணாக்கு கலந்து இட வேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் நோயின் தாக்குதலை குறைக்கலாம். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50 கிலோ மக்கிய தொழு எருவு டன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந் நோயை கட்டுப்படுத்தலாம். பாஸ்போ பாக்டீரியா என்ற நுண்ணுயிர் 200 கிராமுடன் (1 பாக்கெட்) 10 கிலோ தொழு உரம் கலந்து இடுவதன் மூலம் நோயின் பாதிப்பை குறைக்கலாம். இந்நோயை கட்டுப்படுத்த ஆரியோபஞ்சின்சால் 2 கிராம், தாமிர சல்பேட் 1 கிராம் ஆகியவற்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண் டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு தடிமன் உள்ள புதிய இளஞ்சிவப்பு வேரை கூரிய கத்தியாள் சாய்வாக வெட்டி மேற்படி கரைசலில் உள்ள பாலித்தீன் பையில் நுழைத்து கட்டி வைக்க வேண்டும். குருத்தழுகள் நோயை பொறுத்தவரை தென்னங்கன்று, இளம்மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சைநிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதை கட்டுப்படுத்த ஒரு கிலோ மயில்துத்தம் மற்றும் 1 கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5 லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசையை தயாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குருத்து பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்து கொண்டால் நோய் எளிதில் கட்டுப்படும்.

## நாமக்கல்லுக்கு 2600 டன் கோழித்தீவனம் வரத்து

நாமக்கல், : நாமக்கல் ரயில் நிலையத்திற்கு சரக்கு ரயில் மூலம் கொண்டு வரப்பட்ட 2600 டன் கடுகுபுண்ணாக்கு, கோழித் தீவனத்திற்காக பண்ணைகளுக்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. நாமக்கல் ரயில் நிலையத்திற்கு வடமாநிலங்களில் இருந்து அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களும், கோழி மற்றும் கால்நடை தீவனங்களும் சரக்கு ரயில்கள் மூலம் கொண்டு வரப்படுகின்றன. இதன்படி, நேற்று உத்திரபிரதேசம் மாநிலத்திற்கு உட்பட்ட மொரினா பகுதியில் இருந்து கோழித் தீவனத்திற்காக 2600 டன் கடுகு புண்ணாக்கு சரக்கு ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது. இதனை தொடர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகள் மூலம், பல்வேறு பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாசன கண்மாய்களுக்கு வைகை அணை தண்ணீரை திறந்து விட கோரிக்கை

சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்ட பாசன கண்மாய் களுக்கு வைகை அணை தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்று சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர். கோரிக்கைமனு சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்கத்தின் விவசாய அணித் தலைவர் ஆதிமூலம், மாவட் டத் தலைவர் சவுந்தர பாண்டி யன் ஆகியோர் தமிழக முதல்- அமைச் சருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- வைகையாறு பூர்வீக பாசன பகுதியில் சிவகங்கை, ராம நாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில்

ஒரு லட்சத்து 39 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசனவசதி பெறு கிறது. கடந்த 4 ஆண்டாக போதிய மழை இல்லாமல் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட வில்லை. இதனால் வைகையாறு மற் றும் ஏரி, கண்மாய், குளங்கள் வறண்டன. கூட்டு குடிநீர் திட்ட கிணறுகளும், போர் வெல் கிணறுகளும் தண்ணீர் இன்றி விவசாயம் நின்று போனது. விவசாயிகள் விளைச்சல் கிடைக்காமல் நஷ் டம் அடைந்தனர். கடந்த ஆண்டுகளில் சிவகங்கை, ராம நாதபுரம் மாவட்ட வைகை அணை கணக்கு தண்ணீரை பெரியாறு பாசன பகுதிக்கு பொதுப்பணித்துறையினர் வழங்கினர். இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழையினால் பலன் கிடைக்கவில்லை. வைகை தண்ணீர் தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவமழையை நம்பி நெல் நடவு செய்துள் ளனர். வைகையாற்றில் சில நாட்கள் வந்த 5 ஆயிரம் கன அடி மழைநீரும் நிலையூர் கால்வாய்வில் பெரும்பகுதி சென்றுவிட்டது. சிவகங்கை, ராமநாதபுரம் பகுதிக்கு மழை நீர் முழுவதையும் பொதுப் பணித்துறையினர் கொண்டு வந்து சேர்க்க தவறிவிட்டனர். தற்போது சிவகங்கை, ராம நாதபுரம் மாவட்ட கணக்கில் உள்ள 3 ஆயிரம் கனஅடி தண் ணீரையும் பொதுப்பணித் துறை, முதன்மை பொறியாளர் தன்னிச்சையாக முடிவு எடுத்து முல்லைபெரியாறு பாசன பகுதிக்கு அக்டோபர் மாததில் இருந்து வழங்கி வருகிறார்கள். கடந்த 20 நாட்களாக வைகை அணை தண்ணீரை திறக்க விவசாயிகள் கேட்டுக் கொண்டும், தண்ணீரை திறக்க பொதுப்பணித்துறை அதி காரிகள் மறுத்து வருகின்றனர். எனவே தமிழக முதல்- அமைச் சர் விவசாயிகளின் நியாய மான கோரிக்கையை ஏற்று சிவகங்கை, ராமநாதபுரம் மற் றும் மதுரை மாவட்ட பாசன கண்மாய்களுக்கு வைகை அணை தண்ணீரை திறந்து விட

நடவடிக்கை எடுக்க வேண் டும். இவ்வாறுஅவர்கள் அந்த மனுவில் கூறியுள்ளனர் .

## மன்னார்குடி பகுதி குளங்களில் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை அமைச்சர் காமராஜ் தகவல்

மன்னார்குடி, வடகிழக்கு பருவமழை காலம் முடிவதற்குள் மன்னார்குடி பகுதி குளங்களில் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காமராஜ் கூறினார். தூர்வாரும் பணி மன்னார்குடி நகராட்சியில் உள்ள குளங்களுக்கு தண்ணீரை கொண்டு வரும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டதை அடுத்து, தற்போது அரித்திராநதி தெப்பக்குளம், ருக்மணிகுளம், செங்குளம், வண்ணான் குளம், கோபிரளயம் குளம் ஆகியவை நிரம்பி வருகின்றன. இந்த குளங்களை அமைச்சர் காமராஜ் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:– 30 ஆண்டுகளுக்கு மேலாக தண்ணீர் செல்ல வழி இல்லாமல் இருந்த மன்னார்குடி செங்குளம் போன்ற குளங்களுக்கு நீர் செல்லும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டன. இதனால் குளங்களில் தற்போது தண்ணீர் சீராக பாய்ந்து வருகிறது. தட்டுப்பாடுஇன்றி வடகிழக்குபருவமழை காலம் முடிவதற்குள் மன்னார்குடி பகுதியில் உள்ள குளங்களில் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கோடை காலத்தில் பொது மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி குடிநீர் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின்போது மன்னார்குடி உதவி கலெக்டர் செல்வசுரபி, நகரசபை தலைவர் சுதாஅன்புச்செல்வன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பொன்.வாசுகிராம், மன்னார்குடி ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் தமிழ்ச்செல்வம், நகர செயலாளர் மாதவன், கூட்டுறவு அர்பன் வங்கி தலைவர் குமார், கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் செந்தில்ராஜ், நகரசபை துணைத்தலைவர் வரலட்சுமி, தாசில்தார் ரெங்கசாமி, 29–வது வார்டு கவுன்சிலர் சிங்காரவேல் மற்றும் பலர் உடன் இருந்தனர்.